**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**STC. No. 54/2025**

**வழக்கு சாட்சி PW2.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பிரதிப் குமார்** | தொழில் | : சிட்டி யூனியன் வங்கி போடிநாயக்கனூர் துணை கிளை மேலாளர் |
| தகப்பனார் பெயர் | : சுந்தரவடிவேல் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | மதுரை | இனம் | : ஆண் |
| தாலுகா | மதுரை | வயது | : 29/2026 |
| மாவட்டம் | : மதுரை | நாள் | : 30.03.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

எனது சொந்த ஊர் மதுரை. நான் தற்போது சிட்டி யூனியன் வங்கி போடிநாயக்கனூர் துணை கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வரப்பட்ட அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எங்களது வங்கி கிளையில் கணக்கு வைத்துள்ள கிருஷ்ணமூர்த்தி என்பவரது வங்கி பரிவார்த்தனை (State of Account) ஐ நான் இன்று நீதிமன்றத்தில் கொண்டுவந்துள்ளேன் என்றால் சரிதான். அழைப்பாணையில் வரப்பட்டு இருந்து கணக்கு எண் அடிப்படையில் அது தொடர்ப்புடைய (State of Account) ஐ கொண்டுவந்துள்ளேன். வழக்கின் எதிரி கிருஷ்ணமூர்த்தியின் வங்கி கணக்கு தொடர்ப்புடைய காசோலைத்தான் என்னிடம்

காட்டப்படும் காசோலை என்றால் சரிதான். அந்த காசோலை நான் கொண்டு வந்துள்ளள (State of Account) தொடர்ப்புடையது என்றால் சரிதான். எங்கள் வங்கியில் காசோலையானது எதிரி கிருஷ்ணமூர்த்தி கையொப்பம் மாறுப்பட்டுள்ளது ( Signature Differ) என்ற காரணத்தினால் காசோலை திருப்பபட்டது என்றால் சரிதான். அவ்வாறுதான் Ex. P2 வங்கி குறிப்பாணையில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணம் எதிரி கிருஷ்ணமூர்த்தி வங்கி கணக்கு தொடர்ப்புடையது என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி வங்கி கணக்கு தொடர்ப்புடைய Statement of Accounts (கணினி நகல்) Ex. P5 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

என்னிடம் காட்டப்பம் வா.சா.ஆ– 1 காசோலை பெயர் மற்றும் தொகை விவரங்கள் ஒரே நபர் கையெழுத்தில் உள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி வங்கி கணக்கு தொடர்ப்புடைய காசோலை இந்த வழக்கு காசோலை விவரத்திற்க்கு முன்பு எப்போதாவது திருப்பட்டுள்ளது என்றால் அது குறித்து விவரங்கள் என் வசம் இல்லை. பொதுவாக காசோலையில் Payee Sign Above என்ற குறிப்பிறக்கு மேல் தான் காசோலை வரைப்பவர்கள் கையொப்பம் செய்வார்கள் என்றால் சரிதான். அந்த குறிப்பிற்க்கு கீழ் கையொப்பம் செய்தால் காசோலையானது வங்கியால் நிராகரிகப்படும் என்றால் அது குறித்து தெரியவில்லை. காசோலை எந்த தேதியில் எங்கள் வங்கிக்கு Clearing க்கு வந்தது என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. Ex.P2 ஆவணத்தில் குறிப்பாணையில் Signature Differ என்ற காரணத்தினால் திருப்பட்டுள்ளது. காசோலையில் Singed below Magnetic Marking Area கீழ் கையொப்பம் செய்தால் வங்கி நடைமுறை விதிகள் படி அந்த காசோலையானது திருப்பட்டும் என்றால் அது குறித்து தெரியவில்லை. என்னிடம் காட்டப்பம் காசோலை CTS (Cheque Truncation System) தொடர்ப்புடைய காசோலை, CTS காசோலைகள் 2010ம் முதல் அமலுக்கு வந்தது.

24.07.2014ம் தேதி கிருஷ்ணமூர்த்திக்கு அவர் தொடர்ப்புயைட வங்கி கணக்கிற்க்கு காசோலை புத்தகம் வழங்கப்பட்டது.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.30 18:38:48 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.